**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 34/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அஜீத் | Date | : | 04.10.2024 |
| Father Name | : | செல்லத்துரை | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (U/s 355 BNSS Act ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

(எதிரி தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.M.P. No. 2254/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் மண்டபத்து வாசலில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை அகலமான மற்றும் பிரதான சாலை என்றால் சரிதான். நான் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து 3 அடி துாரத்தில் விபத்து நடந்தது. விபத்தில் இறந்த நாகராஜ் எனது ஊரைச்சேர்ந்தவர் ஆவார். விபத்தில் இறந்த நபர் இண்டிகேட்டர் போட்டுக் கொண்டு வந்தார் என்று நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலீசார் என்னை அன்றைய தினமே மதியம் 01.45 மணிக்கு மண்டபத்தின் வாசலில் வைத்து விசாரித்தார்கள். நான் எந்த திசையில் நின்று பேசிக்கொண்டிருந்தேன் என்றால் நாங்கள் ரவுண்டாக நின்று பேசிக்கொண்டிருந்தோம். திருமண மண்டபவ வாசலிலிருந்து ரோடு 40 – 50 அடி துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் நான் சம்பவத்தை பார்க்க வாய்ப்பில்லை என்றாலும், சம்பவத்தை பார்த்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வாகனத்தை ஓட்டி வந்த நாகராஜ் தனது வாகனத்தை நிறுத்தி தனக்கு பின்னால் வாகனங்கள் ஏதேனும் வருகிறதா என்று பார்த்துவிட்டு சாலையை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். அவ்வாறு நாகராஜ் பார்க்காமல் திரும்பியதும் இந்த விபத்துக்கு காரணம் என்றால் சரிதான். பொதுவாக இருசக்கர வாகனங்களில் செல்வோர் பகல் நேரங்களில் திரும்பும் போது கையால் சைகையை காண்பித்து திரும்புவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு நாகராஜன் கையால் சைகை காண்பிக்காமல் திரும்பியது இந்த விபத்துக்கு காரணம் என்றால் சரிதான். நானும் எனது நண்பர்களும் பேசிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அப்போது நாகராஜ் அடிப்பட்டு கிடந்தார் என்றால் சரிதான். மற்றொரு வாகனத்தில் வந்த கணேசனுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் நாங்கள் அவரை கவனிக்கவில்லை. அவர்கள் இரண்டுபேரும் எழுந்து நின்றார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், இறந்துபோன நாகராஜின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்த நாகராஜின் குடும்பத்தினருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நான் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**